25th March 1964]

(*b*) A total sum of Rs. 1,35,690 has been paid from April 1963 to January 1964.

(*c*) Yes, Sir.

*399 கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலத்திலிருந்து சர்க்கார் பீங்கான் தொழிற் சாலையில் 1961, 1962, 1963 வருடங்களில் கிடைத்த லாபம் எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: The Unit was in its initial stages till 1962–63 and had not earned a profit till then.

திரு. ம. கமலநாதன்: பீங்கான் தொழிற்சாலையும், மண் பாண்டத் தொழிற்சாலையும் ஒன்றுதானா? மண்பாண்ட பயிற்சி தொழிற்சாலை துவக்குவதாக இருந்ததே, அவ்வாறு ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பீங்கான் தொழிற்சாலை வேறு, மண்பாண்டத் தொழிற்சாலை வேறு.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது விருத்தாசலத்தில் பீங்கான் தொழிற்சாலை துவக்கி, அதற்கு வேண்டிய களிமண் கொச்சிப் பகுதியிலிருந்து வருகிறது. பக்கத்திலுள்ள நெய்வேலி யில் கிடைக்கும் களிமண்ணை பயன்படுத்தி இந்தத் தொழிற் சாலையை வளப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது நீலகிரிப் பகுதியிலிருந்து வருகிற களிமண் சிறந்ததாக இருக்கிறது என்பதனால் அதை உபயோகப்படுத்துகிறோம் பிறகு இது இரண்டையும் கலந்து உபயோகப்படுத்தலாம் என்று யோசனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. மு. கருணாநிதி: இந்தத் தொழிற்சாலையில் ஆண்டு தோறும் எவ்வளவு மதிப்புள்ள பீங்கான் தயாரிக்கப்படுகிறது என்று கூறமுடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன். சென்ற ஆண்டிலே ரூ. 6,46,924 மதிப்புள்ள பீங்கான் பொருள்கள் தயார் செய்யப் பட்டிருக்கிறது. அதில் ரூ. 4,91,736 பெறுமான பண்டங்கள் விற்கப்பட்டிருக்கிறது.

திரு. கி. நாராயணசாமி பிள்ளை: லாபம் கிடைப்பதற்கு வழி வகைகள் செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் பொது விவாதத்தின் போது சொன்னேன். இதற்கு ஒரு பெரிய 'கில்ன்' வேண்டும், சூளை பெரியதாக வேண்டும். அது வந்தவுடன் அதிக லாபம் வரும். ஆனால், இந்த ஆண்டில் லாபத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறது. 1963-64-ல் அது லாபத்தில் வேலை செய்திருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[25th March 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர்: இதற்கான களிமண் கேரளா விலிருந்து கொண்டுவரப்படுவது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சில நீலகிரியிலிருந்தும் சில கேரளாவிலிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. நல்ல களி மண் அந்தப் பக்கத்தில் கிடைக்கிற காரணத்திஞல், அவை கொண்டுவரப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாக்கப்படுகிற பீங்கான் சாமான்கள் விற்பனையாகின்ற நிலைமைகள் இருக்கின்றனவா? அல்லது தேங்குகிற நிலைமைகள் இருக்கின்றனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் இப்பொழுதுதான் கணக்குக் கொடுத்தேன். ரூ. 6,46,000 சில்லரை மதிப்புள்ள சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. சுமார் ரூ. 5 லட்சம் மதிப்புள்ள அளவுக்கு சாமான்கள் விற்பனை செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, சாமான்கள் விற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. தேக்கம் என்று சொல்லுவதற்கில்லை. குறிப்பாக, நாம் இப்பொழுது 'டிபென்ஸ் ஆர்டர்ஸ்' கூட நிறைவேற்றிக் கொண்டிருக்கிருேம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: அந்தத் தொழிற்சாலையை நாங்கள் நேரில் போய் பார்த்தோம். நல்ல சாமான்கள் செய்கிருர்கள். விளம்பரம் செய்யப்படாததிஞல், சரியாக விற்பனை ஆகவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சரியாகத்தான் விற்பனை யாகிக் கொண்டிருக்கிறது. விளம்பரம் செய்தால் நல்ல விற்பனை யாகும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இப்பொழுது நாம் டிபன்ஸ் ஆர்டர்ஸ்க்கு சப்ளை செய்து கொண்டிருக்கிற காரணத் திஞல், விளம்பரத்திற்காக இப்பொழுது செலவு செய்ய தேவை இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: சேலத்தில் வெள்ளைக் களி மண் கிடைப்பதால், பீங்கான் சாமான்கள் செய்வதற்காக வெளிப் பிரதேசங்களிலிருந்து களிமண் கொண்டுவரவேண்டிய தேவை இல்லை. ஆகவே, சேலத்தில் பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சேலத்தைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கோ. பாலகிருஷ்ணன்: 1962-ல் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, எனது தொகுதியில் திருவக் கரையில் பீங்கான் தொழிற்சாலை அமைப்பதாகச் சொல்லியிருந் தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விருத்தாசலம் தொழிற் சாலையைத் தவிர, மற்ற எல்லா ஜில்லாக்களைப் பொறுத்த வரையிலும் தனிக்கேள்விகள் போடவேண்டும்.

25th March 1964]

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி ஆகிற அத்தகைய பீங்கான் சாமான்களை விற்பனை செய்வதன் மூலம் லாபம் அதிகமாக ஏற்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த வகையில் செல வினம் அதிகமாகி இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த ஒரு பாக்டரியும் 'புல் கபாஸிடியில்' வேலை செய்தால்தான் லாபம் கிடைக்கும். இந்த பாக்டரி புல் கபாஸிடியில் வேலை செய்வதற்கு சூளை பெரியதாக இருக்கவேண்டும். சூளை பாரின் எக்ஸேஞ்ச் கிடைத் தால்தான் வெளிநாட்டிலிருந்து கொண்டுவர முடியும். அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறோம். பாரின் எக்ஸேஞ்ச் கிடைத்துவிடும் என்று நினைக்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, the goods manufactured in the Virudhachalam Ceramic Factory are mostly artistic wares and other things. Will the Government convert the same into a commercial Unit?

THE HON. SRI R. VENKATARAMAN : I wish the hon. Member should visit the factory. Actually, to-day it is supplying all sanitary-wares and also wash basins, etc. The artistic wares are only for publicity and aesthetic purposes. It is a negligible part of the functioning of the factory.

Taxi-stand at Government Estate

*401 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government will take steps to see that some taxis are stationed in the Government Estate for the convenience of the Members of the Legislature who stay in the hostels?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under consideration.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அரசாங்க விடுதியில் எத்தனை டாக்ஸிகள் வைப்பதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே வைப்பதா, வேண்டாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. என்னுடைய சக அமைச்சர், பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு அமைச்சர் கவர்ன்மெண்டு ஹவுஸ் எஸ்டேட் பொது வழி அல்ல, "It is not a public thorough fare" என்று சொல்லுகிறார்கள். அந்த இடத்தில் டாக்ஸிகள் வைத்தால், எல்லோரும் அங்கு வந்து ஏறும்படியான நிலைமையை உண்டாக்கினால், அங்கு இருக்கிற பிரைவஸி போய்விடும். அதைத்தான் இப்பொழுது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.